**திருநீற்று புதன் "A" ஆண்டு**
**18 பிப்ரவரி 2026**

**முதல் வாசகம் : யோவே 2:12-18**
**இரண்டாம் வாசகம்: 2 கொரி 5:20 - 6:2**
**நற்செய்தி வாசகம்: மத் 6: 1-6 16-18**

**முன்னுரை:**

**வழிப்போக்கர் ஒருவர் ஒரு பாலைவனத்தின் முனையில் நின்றுக் கொண்டிருந்து அங்கிருந்த ஒரு வயதான வழிகாட்டியிடம் "இங்கிருந்து வீதியை அடைய எவ்வளவு நேரம் ஆகும்?" என்றுக் கேட்டார்.**
**வழிகாட்டி "நடந்துப் பாருங்கள்" என்று பதில் கூறினார். வழிபோக்கர் மறுபடியும் "எவ்வளவ நேரம் நடக்க வேண்டும்?" என்றார். வழிகாட்டி மறுபடியும் "நடந்துப் பாருங்கள்" என்றார். வழிப்போக்கர் நடக்க ஆரம்பித்தப்பின் அந்த வழிகாட்டி அவரிடம் "40 நாட்கள் ஆகும்" என்றார்.**
**எனதருமை நண்பர்களே இன்று நாமும் அத்தகையதொரு இடத்தில் நான் நின்றுக் கொண்டிருக்கிறோம்.**
**திருநீற்று புதனான இன்றிலிருந்து நாம் தவக்காலம் என்ற பாலை நிலத்தில் காலடி எடுத்து வைக்கிறோம். நாற்பது நாள்கள் இதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்நாட்கள் நாம் நம் ாழ்க்கையிலிருந்து தப்பி ஓடுவதற்கல்ல மாறாக நம் வாழ்வு எத்திசையில் பயணிககிறத என்பதை கண்டுபிடிப்பதற்காகவே தரப்பட்டுள்ளன. இத்தனை நாட்களாக ஓட்டமும் நடையுமாக நிதானமின்றி ஓடிக்கொண்டடிருந்த வாழ்வை சற்றே நிறுத்தி நிதானிக்க இந்த நாட்கள் தரப்பட்டுள்ள. நமது ஒரே விதமான வாழ்வு முறைகள், பழக்க வழக்கங்களிலிரந்து சற்றே விலகி கடவுள் நம்முள்ளும், நம் வாயிலாகவும் செயல்பட அனுமதிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளன.**

**திருநீற்று புதன் நமக்கு நாம் மறந்து வாழும் இரு உண்மைகளை நமக்கு நினைவுப்படுத்துகின்றன.**
**அவை -- வாழ்க்கை மிகவும் நுட்பமானது -- காலம் பொன்போன்றது.**
**ஆயினும் அது ஒரு நம்பிக்கை செய்தியையும் அளிக்கிறது -- நடவுள் நம் அருகில் இருக்கிறார். இதுவே அருளின் காலம்.**

**நாம் இந்த அருளின் காலத்தைத் துவங்கும் இச்சமயத்தில் போர்களினால் பாதிப்புக்குள்ளான மனிதர்கள், அநீதிகளாலும் வன்முறைகளாலும் துன்புறுத்தப்படும் உலக மாந்தர் அனைரையும் நினைவுக்கூர்ந்து நம் ஆண்டவரிடம் நம் இதயங்களை அவர்பால் திரும்பச் செய்யவும் அதன் வாயிலாக நாம் இவ்வுலகில் அமைதியின், இரக்கத்தின் கருவிகளாகிடவும். மக்களுக்கு நலமளிப்போராக மாறிடவும் வரம் வேண்டுவோம்.**

**எனவே நம்மை நாம் இறைத்திருமுன் அர்ப்பணித்து அவரது இரக்கத்தை இறைஞ்சுவோம்.**

**பாவமன்னிப்பு வழிபாடு:**

**கடவுள் நம் மீது இரங்கிட நாம் அவரது இரக்கத்தின் தேவைக் குறித்து சிந்திப்போம்.**
**ஆண்டவராகிய இயேசுவே உம்மிலிருந்து விலக்கி இழுக்கப்பட்டு தூரமாக ஓடிக்கொண்டிருக்குட எங்கள் இதயங்களை உம்பால் அழைத்தருளும் - ஆண்டவரே இரக்கமாயிரும்.**

**கிறிஸ்து இயேசுவே எங்களை உம்மிடம் அழைத்து எங்கள் வழிகளை மாற்றிக் கொண்டு உமது நற்செய்தியை நம்பிடச் செய்யும் கிறிஸ்துவே இரக்கமாயிரும்.**

**ஆண்டவராகிய இயேசுவே எங்கள் செயல்களைப் பாராமல் எங்கள் இதயங்களின் எண்ணங்களைக் கூர்ந்து நோக்கும் ஆண்டவரே இரக்கமாயிரும்.**

**மன்னிப்பு மன்றாட்டு:**
**நம்மைத் தம்மிடம் மீண்டும் மீண்டும் அழைத்துக்கொள்ளத்**
**தயங்காத**
**இரக்கத்தின் ஆண்டவர்**
**நம் பாவங்களை மன்னித்து**
**நம்முள் காயப்பட்டுள்ளவற்றை நலமாக்கி**
**நிறைவாழ்வின் பாதைக்குள் நம்மை வழிநடத்துவாராக -- ஆமென்.**

**மறையுரை: "உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்"**

**ஒரு மனிதர் தன் தாத்தாவின் வீட்டிலிருந்த மேசை அறையிலிருந்து ஒரு பழைய திசைக்காட்டி எனப்படும் காம்பஸைக் கையில் எடுத்தார். அதை ஆர்வமிகுதியால் உயரத் தூக்கினார். மேலும் பலவாறு அதை அப்படியும் இப்படியுமாக அசைத்துப்பார்த்தார். ஆனால் காம்பஸிலிருந்து எந்த**

மாற்றத்தையும் அவர் காண முடியவில்லை அது அப்படியே இருந்தது. அதனால் எரிச்சலடைந்த அவன் அதை ஒன்றுக்கும் உதவாது என்று எண்ணி தூரவீசிட முயற்சித்தான். அப்போது அங்கு வந்த மலையேறுபவர் ஒருவர் இந்த காம்பஸ் (திசைக்காட்டி) பழுதடைந்தது அல்லஇ அது நல்ல நிலையில் தான் உள்ளது. நீங்கள் அந்த உலோகத்திற்கு மிக அருகில் நிற்கிறீர்கள். நீங்கள் இருக்கும இடத்தை விட்டு சற்று விலகி வாருங்கள். அது தானாகவே அதன் வழக்கமான வடக்கு திசையை நோக்கித் தன் முள்ளை நகர்த்திக் காட்டும்'' என்றார்.

இத்தவக்காலம் கூறவதும் இதுவே. நம்மைக் வா்ந்திழுக்கும் பல்வேறு நிலைகளிலிருந்து அதாவது நம்மைச் சுற்றி எழும் சப்தங்கள், பழக்க வழக்கங்கள், பல்வேற திசைத் திருப்பல்கள், போலித்தனமான பாகாபடபுக்கான உத்தரவாதங்கள் ஆகியவற்றிலிருந்து விலகி வந்தோமானல், நமது உள்ளமாகிய திசைக்காட்டி, மீண்டும் நம்முள் இருக்கும் இறைவனை நமக்கு சுட்டிக்காட்டும். திருநீற்று புதன் அத்தகைய திசைக்காட்டியை நம் கரங்களில் அளிக்கிறது.

1. சாம்பல் (திருநீறு) பொய்மைக் கலவாத உண்மை:

இன்றைய வழிபாட்டில் நாம் கேட்கும் வார்த்தைகள் நம்மை நிலைக் குலையச் செய்யயும் -- ''நீங்கள் மண்ணாக இருக்கிறீர்கள். மண்ணுக்கே திரும்புவீர்கள்''. ஆனால் நாம் வாழும் இவ்வுலகம் நம்மைப் பார்த்து ''இளமையாக தோற்றமளியுங்கள், உடல் விமையோடு இருங்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அளவை மீறுங்கள் என்று நம்மைப் பார்த்து வலியுறுத்திக் கூறும்போது நாம் இன்று வழிபாட்டில் கேட்கும் வார்த்தைகள் நமக்குக் கோபமும் எரிச்சலூமூட்டுபவையாக இருக்கலாம். நாம் எப்போதுமே நமது பலவீனங்களை மறைத்துக் கொளடளவும், இறப்பை தவிர்க்கவும், நமது இறப்பு அதிக தூரத்திலிருப்பதாக எண்ணவும் கற்பிக்கப்பட்டிருக்கின்றோம். ஆனால் திருநீற்று புதன் இத்தகைய பொய்மைக் கலந்த உண்மைகளை நமக்கு தருவதில்லை. அது சரியான உண்மைகளை நமக்கு வெளிப்படுத்துகிறது. அதுவும் அவை நம்மை பயமுறுத்துவதற்கல்ல மாறாக நம்மை விடுவிக்கவே அளிக்கிறது.

ஒரு தலைமை அதிகாரி தனக்கு ஏற்பட்ட கடுமையான மாரடைப்பிலிருந்து மீண்டு வந்தப் பின் இவ்வாறாக பகிர்ந்துக் கொண்டார் ''நான் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்த போது தான் உலகம் நான் இங்கில்லாவிட்டாலும் அது தானாகவே அதுவும் மிகவும் நன்றாகவே இயங்கும் என்பதை நன்றாகப் புரிந்துக் கொண்டேன்'' என்றார். இதுவரை அவர் இல்லையென்றால் அவர் சம்பந்தப்பட்டத் தொழிலில் எதுவுமே நகராது என்ற எண்ணத்துடன் வாழ்ந்துக் கொண்டிருந்திருக் கிறார். அந்தப் புரிதல் அவரை மிகவே மாற்றியது. அதன் பின் அவர் வெற்றியைக் குறிவைத்தே செய்தப் பயணங்களைக் குறைத்துக் கொண்டார். உறவுகளை பேணிக்காப்பதில் அதிக நேரத்தை செலவிட்டார். மரணத்தை நெருங்கி மீண்டு வந்த அவரது அந்த அனுபவம் அவர் எதற்கு முதன்மை இடம் தர வேண்டும், முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதனை மாற்றி சரி செய்தது. திருநீற்று புதனில் பூசப்படும் திருநீறும் இதையே செய்கிறது. நாம் வாழும் இவ்வுலன வாழ்க்கை மிகக் குறுகியது. அதை பொருளுள்ள விதத்தில் வாழ வேண்டும். நாம் வாழும் விதம் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது போன்றவற்றை நமக்கு நினைவிற்குக் கொண்டு வருகிறது.

2. உங்கள் முழு இதயத்துடன் என்னிடம் திரும்பி வாருங்கள் (யோவேல்)

இன்றைய வார்த்தை வழிபாட்டில் யோவேல் இறைவாக்கினர் ''உங்களை இன்னும் முன்னேற்றிக் கொள்ளுஙகள் என்றோ'' அல்லது ''இன்னும் கடுமையாக உழையுங்கள்'' என்றோ கூறவில்லை மாறாக உங்கள் முழு இதயத்துடன் என்னிடம் திரும்பி வாருங்கள்'' என்றுத் தான் கூறகிறார். ''திரும்பி வாருங்கள்'' என்றால் ''நாம் ஏற்கனவே கடவுளை சார்ந்தவர்களாகவே இருக்கிறோம்'' என்று பொருளாகிறது. தவக்காலம் என்பது கடவுளின் அன்பைப் பெறுவது என்று மட்டுமல்ல அந்த அன்பை நாடி திரும்ப வரவேண்டும்.

நிகழ்வு --

ஒரு அருட்தந்தை மறைக்கல்வி வகுப்புப் பிள்ளையைப் பார்த்து ''மனம் திரும்புதல்'' என்றால் என்ன? என்றுக் கேட்டார். அதற்கு அந்தப் பிள்ளை தந்த பதில் ''நாம் தவறான பாதையில் செல்வதை உணர்ந்தால் உடனே அதனை விட்டு தடம் மாறி நல்ல வழிக்குதத் திரும்புதல்'' என்று பதிலளித்தது. என்ன எளிமையான ஆனால் ஆழமான இறையியலுடனான பதில்....
மனம் திரும்புதல் என்றால் சுய-தீர்ப்பிட்டுக் கொள்ளுதல் அல்ல. மாறாக அது ஒரு மறு சீரமைத்தல். நமது உள்ளமாகிய திசைக்காட்டும் கருவியை ஒழுங்குப்படுத்த நம்முள்ளே இறைவனன நுழைந்திட அனுமதித்தல்.

3. இதுவே தக்கத் தருணம் என்று நம்மைத் துரிதப்படுத்தும் புனித பவுல்:

புனித பவுல் இன்றைய நாளின் செய்தியை தீவிரமக்ககிறார். ''இதுவே தகுந்த தருணம். இன்றே மீட்பின் நாள்'' என்கிறார் புனித பவுல். நமது நேரம் இன்றே இப்போதே என்றுக் கொள்ளப்பட வேண்டும.

எல்லாம் ஓய்ந்தப் பிறகல்ல
நாம் ஓய்வுப் பெற்றப் பிரகல்ல
உயிர்ப்புப் பெரு விழாவிற்குப் பிறகல்லை
இப்போதே

ஒரு மனிதர் தான் செபிப்பதுக் குறித்து ''எனக்கு மிகுதியான நேரம் கிடைக்கும் போது நாம் செபிப்பேன்'' என்றக் கூறினார். ஆனால் பல ஆண்டுகள் கழிந்தப்பின்னரும் அந்த மனிதர் எதிர்ப்பார்த்திருந்த அந்த மிகுதியான நேரம் இன்னும் அவருக்கு வரவில்லை. ஆனால் அதைக் குறித்த சாக்கு போக்குகள் ஏராளமான வந்திருந்தன.

தவக்காலம் நாம் கூறவிரும்பும் சாக்கு போக்குகளை இடைமறிக்கிறது. அது இறையருள் என்பது நம் விருப்பப்படித் தள்ளிப் போடும் செயல் அல்ல என்று நம்மை எச்சரிக்கிறது. கடவுள் நம்மை இன்றே இப்போதே சந்திப்பதையே விரும்புகிறார். நம் விருப்பப்படி நாம் குறிப்பிட்டு வைக்கும் தள்ளிப் போன நாள்களில் அல்ல. நமது கற்பனைக் கேற்ப அவர் காத்திருப்பதில்லை.

4. இயேசுவும் நாம் தவறான காரணங்களுக்காக செய்யும் நற்செயல்கில் உள்ள ஆபத்துகளும்:

இன்றைய நற்செய்தியில் இயேசு மூன்று புனிதமான நற்காரியங்களைக் குறித்துப் பேசுகிறார் -- அவை இறைவேண்டல், நோன்பு, அறச்செயல்கள். அவர் அவற்றை விமர்சிக்கவில்லை. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள ஆபத்தை உணர்த்துகிறார். அவற்றின் உள்நோக்கம் குறித்து பேசுகிறார். ஒரு பிரபலமான சொல்லாடல் உள்ளது -- ''நமது தான் என்ற கர்வம் நம் புனிதத்தனத்தையே கண்ணாடியில் காணப்படும் நகலான பிம்பமாக்கி விடுகிறது''.

நாம் கடைப்பிடிக்கும் சமயத்திற்கடுத்த நடைமுறை செயல்கள் வெகுவிரைவிலயே நமக்கு ஒரு வெளியரங்க அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், கட்டுபாடுகளை கடைபிடிக்க அல்லது சுயதிருப்தியை பெற்றிடும் செயல்பாடுகளாக மாறிவிடக் கூடும் என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார். எனவே தான் அவர் அடிக்கடி ''மறைவாயிருககும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்'' என்று கூறிவந்தார்.

கடவுள் நம் வெளித்தோற்றத்தைக் கண்டு அதில் நம்மைக் குறித்து எடைபோட்டு நமடமைக் குறித்தக் கருத்தை முடிவு செய்பவர் அல்ல. அவர் நமது உள்ளத்தின் எ்ணங்களைக் கர்ண்கிறார்.

''ஒரு துறவியிடம் அவர் ஏன் அமைதியாகவே செபிக்கிறார் என்றுக் கேட்கப்பட்டது. அதற்கு அவர் ''நான் கூறுவதைக் கேட்வியலாது இறைவனின் இதயம் கடினமானது அல்ல. ஆனால் என் இதயம் தான் கடினப்பட்டுக் கிடக்கிறது'' என்று பதிலளித்தாராம்.

5. ஒரே பாதை ஆனால் மூன்று வழிகள்-- இறைவேண்டல்,
மேற்கூறப்பட்ட மூன்றும் தனித்தனியான செயல்திட்டங்கள் அல்ல. அவை அன்பினால் நிரம்பிய மூன்று விதமான வழிகள்.
இறைவேண்டல் : நம்மை இறைவன்பால் திருப்புகிறது
அறச்செயல்கள் : நம்மை பிறமனிதர்பால் திருப்புகிறது
நோன்பு : நம்மை உள்நோக்கிய பயணத்திற்கு வழிநடத்துகிறது - அது நமக்கு
நோன்பு அதாவது உ்ண்ணா நோன்பு (உண்ணாவிரதம்) பெரும்பாலம் தவறாகவே எண்ணி அனுசரிக்கப்படுகிறது. அது உண்மையிலட சில உணவுகளை தவிர்த்தலோ அல்லது சில தேயைற்றப் பழக்கங்களைத் தவிர்த்து நம்மை சரிசெய்துக் கொ்ளுதலோ அல்ல. மாறாக நோன்பு என்பது நம்மை நாமே சோதித்துப் பார்த்து என்னைக் கட்டுப்படுத்துவது எது? என்பதைக் கண்டறிவது.
ஒருமுறை ஒருவர் என்னிடம் ''உண்ணா நோன்பிருந்தபோது தான் நான் முன்பெல்லாம் பசி எடுத்து அல்ல மாறாக எனக்கு வேறு எதுவும் முக்கியமான பணி இல்லாது சலிப்புடன் இருந்தபோது, மன அழுத்தத்தின் போது, எந்த நேரமும் சாப்பிடும் ஒருவிதாகக் கெட்டப் பழக்கத்தினால் நான் தேவையின்றி சாப்பிட்டிருக்கிறேன் என்றுக் கண்டுணர்ந்தேன்'' என்றுப் பகிர்ந்துக் கொண்டார். அத்தகையக் கண்டுப்பிடிப்பே ஒரு அருள்வரம் தான்.

நோன்பிருத்தவ் அதாவது உணவைத் தவிர்த்தல் நம் உள்ளத்தில் இறைவளக்கோர் இடத்தைத் தோற்றுவிக்கிறது. இரக்கத்தை சுரக்கச் செய்கிறது. மற்றவர்களுக்கு செவிசாய்க்கச் செய்கிறது. நமது உண்ணா நோன்புகள் நம்மை இளகிய மனத்தோராக, பொருமையுள்வர்களாக, ஏழை எளியோரின் தேவைக் குறித்து அக்கறைக் கொண்டோராக மாறவில்லை என்றால். நமது நோன்பின் பயனை அடைய நாம் தவறிவிட்டோம் என்றுப் பொருள்.

6. நம்மீது பூசப்படும் திருநீறு என்பது இறுதியான செயல்பாடல்ல:

நம்மீது பூசப்படும் திருநீறு (சாம்பல்) கடந்த ஆண்டு குருத்தோலை ஞாயிறின் போது கொடுககப்பட்டு மீண்டும் ஆலயத்தில் அளிகப்பட்ட உலர்ந்த ஓலைகளை எரித்ததிலிருந்துப் பெறப்பட்டது. அன்ற வெற்றியின் ஆர்ப்பரிப்பாக விளங்கிய குருத்தோலைகள் இன்று சாம்பலாகி

விட்டன. இது ஒரு தாற்காலிகமாக நிகழும் விபத்தைப் போன்றதல்ல. மாறாக அது நமக்கு நல்லதொரு பாடத்தைப் புகட்டுகிறது. நமது அபார வெற்றிகளும் ஒருநாள் மங்கித்தான் போகும். அதே சமயத்தில் அது நமக்கு ''கடவுள் முடிந்தப் போயிற்று என்று நாம் எண்ணிக் கொண்டிருப்பவற்றிலிருந்த புதிய வாழ்வை உண்டாக்க வல்லவர் என்பதையும் நமக்குக் கூறுகிறது. திருநீறானது நமது நெற்றியில் வட்ட வடிவத்திலோ, அல்லது கோடுகளாகவோ வரையப்படுவ தில்லை. அவை சிலுவை வடிவத்தில் நெற்றியில் வரையப்படுகிறது. சிலுவை அடையாளம் நமது விசவாசத்தை அறிக்கையிடுகிறது. நமது சாம்பல் (தூசு) கிறிஸ்துவை அது அடையபளப்படுத்தி யுள்ளது.
ஒரு தோட்டக்காரர் ''நல்ல சத்தான மண் இறந்துப்போன (மட்கிப்போன) பொருள்காளல் தான் உற்பத்தியாக்கப்படுகிறது'' என்றுக் குறிப்பிடுகிறார்.
கடவுள் நம்மிலுள்ள வீணாணவற்றையும், நமது தோல்விகளையும், நமது இழப்புகளையும், நமது நொறுங்கிய தன்மைகளையும் அவர் புறந்தள்ளிவிடுவதில்லை. அவற்றையெல்லாம் அவர் தம் கையிலெடுக்கும் போது அவை வளமான நிலமாக மாறிவிடுகிறது.

ஒரு வயலின் ஆசிரியர் தன் மாணவர்களுக்கு வகுப்பில் கூறியதை இங்கே பார்ப்போம். ''நீங்கள் வயலினை வாசித்துப் பழகும் போது உங்கள் தவறுகளை ஒதக்கிவிடுவதற்காக மட்டும் பயிற்சி எடுக்காதீர்கள். மாறாக எதிர்காலத்தில் அந்தத் தவறுகள் உங்களுக்கு அச்சுறுத்தல்களாக மாறிவிடாதிருக்கவும் நீங்கள் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.''.

தவக்காலமும் அப்படிப்பட்டதே. நம்மிடம் குறையே இல்லாதவர்களாக மாறவதற்கான காலம் அல்ல. மாறாக நாம் அச்ச உணர்வின்றி இறைவனை அணுகிவர உதவும் காலம் இது. அதாவது இறைவன் முன்பாக உண்மையுள்ளவர்களாக, திறந்த மனத்தோராக, நம்மிலுள்ள பழையதைக் களைந்து புதிதாகத் துவங்கிட விரும்புவோராக நாம் மாற உதவி செய்கிறது.

நெற்றியில் சாம்பலைத் தரித்து தவக்காலத்தைத் துவங்கும் நாம் இந்த 40 நாட்களில் நம் நமமு முகங்களை இறுக்கமக, வருத்தமாக வைத்திருக்கத் தேவையில்லை. மாறாக நம்பிக்கைக் கொண்ட இதயம் கொண்டோராக மாற வேண்டும். ஏனெனில் நம்மை அழைக்கும் கடவுள் அருளும் இரக்கமும் கொண்டவர். நீடிய பொருமைக் கொண்டவர். சினம் கொள்ளத் தாமதிப்பவர்.

திருநீற்று புதன் நாம் யார் என்றுக் கூறுகிறது -- நாம் வெறம் சாம்பலும் தூசியுமானவர்கள்.
தவக்காலம் நமக்குக் கடவுள் யார் என்றுக் காட்டுகிறது -- அவர் நம்பத்தக்கவர்
உயிர்ப்புப் பெருலிழா நாம் எங்கே செல்லவிருக்கிறோம் என்பதைக் கூறுகிறது - நிலைவாழ்விற்கு

"கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே பதைத்தருளும். உறுதிதரும் ஆவியை புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்" (தி.பா 51:10) ஆமென்.

சிறிய மறையுரை:
துவக்கமும் முடிவும் ஒரு கதையோடும். இடையில் சில நிகழ்வுகளும் தரப்படுகின்றன.

இர் ஒரு பிரபலமான வயலின் மேதையின் கதை. ஒருநாள் அந்த மேதை ஒரு பரபரப்பான இரயிநியலத்தின் சுரங்கப்பாதையில் நின்றுக் கொண்டு வயலினில் இசைக்கலானார். அநேகர் அதைக் கண்டுக்கொள்ளவே இல்லை. ஒர சிலரே நின்று அவரது இசையை இரசித்தனர். நாட்கள் கழிந்தன. அதே வயலின் மேதை ஒருநாள் ஒரு அரங்கத்தில் தன் இசைக் கச்சேரியை நடத்தினார். அரங்கம் நிரம்பி வழிந்தது. மக்கள் ஏராளமான பணத்தை அவருக்கு அளித்தனர். அவரது இசையில் அவர் எந்த மாற்றமும் செய்யவில்லை. என்ன மாற்றம் நிகழ்ந்தது என்றால் மக்கள் ஒரிடத்தில் அமர்ந்து அந்த இசையைக் கேட்க வேண்டும் என்று நேரத்தை ஒதுக்கி கவனித்தது தான் மாற்றமே.

திருநீற்று புதன் என்பது கடவுள் தன் கையில் இசைக்கருவியை நமது ஒய்வு ஒழிச்சல் .ல்லாமவட பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் நம் வாழ்விற்கு இடையில் இசையை மீட்டுவதற்கு ஒப்பாகும். தவக்காலம் நம்மை நின்று நிதானித்து அந்த இசையைக் கேட்கத் தூண்டுகிறது. அத்துடன் அது நம்மை நாமே ''நான் எதனை கவனிக்காது அவசரமாக ஓடிக்கொண்டிருக் கிறேன்?

இன்றைய வாசகங்களின் மைய சிந்தனை:

இன்றைய வாசகங்கள் தவக்காலத்தைக் குறித்த சரியானதொரு நேர்க்கோட்டினை வரைந்துக் காட்டுகிறது.
முதல் வாசகத்தின் இறைவாக்கினர் ''உங்கள் முழு உள்ளத்துடன் என்னிடம் திரும்பி வாருங்கள்'' என்றுக் கூக்குரலிடுகிறார்.
அவர் அரைகுறை மனத்துடன் வரச் சொல்லவில்லை
அவர் வெளியரங்கமான மனத்துடன் வரச் சொல்லவில்லை
முழு உள்ளத்துடன் திரும்ப வரச் சொல்கிறார்.

2ஆம் வாசகத்தில் புனித பவுல் இதையே துரிதப்படுத்துகிறார். அவர் மக்களை நோக்கி "இதுவே ஏற்றக் காலம். இன்றே மீட்பின் நாள்" என்றே முழங்குகிறார்.
அவர் நாளை என்றுக் கூறவில்லை அல்லது நமக்கு வாழ்வு சூழல்கள் ஒரு நிலைக்கு வருகிறதோ அப்போது என்றோ கூறவில்லை. அவர் கூறுவது "இன்றே" "இப்போதே" என்கிறார்.

இயேசு நற்செய்தியில் மென்மையான மொழியில் உண்மையை ஓங்கி உரைக்கிறார். அவர் நாம் செய்யும் / அனுசரிக்கும் நல்ல செயல்கள் அதாவது இறைவேண்டல்கள், நோன்பு, அறச்செயல்கள் ஆகியவை பல வேளைகளில் தீய நோக்கங்களுடன் செய்ய நேரிடலாம் என்று எச்சரிக்கிறார். இதனால் இயேசு அந்த நற்செயல்களை விமர்சிக்கவில்லை. ஆனால் அவற்றை புனிதப்படுத்தவே அதாவது நோக்கமும் செயல்களும் தூய்மையாக இருக்க வேசண்டும் என்றே விரும்புகிறார்.

நிகழ்வு:

ஒரு குழந்தை "மக்கள் ஏன் தவக்காலத்தில் சாக்கலேட்டுகளை சாப்பிடுவதைத் தவிர்க்கிறார்கள்?என்றுக் கேட்டது. குழந்தையின் தாய் "இயேசுவை நினைவுப்படுத்திக் கொள்ள" என்று பதிலளித்தார். அந்தக் குழந்தை அதை நிதானமாகக் கேட்டு அமைதியாக சிந்தித்தது. பின்னர் அது தாயை நோக்கி "அப்படியானால் அந்த செயல நம்மை இன்னும் கனிவானவர்களாக மாற்ற வேணடாமா?" என்றுக் கேட்டது.
இந்த வினா நேரடியாக இன்றைய நற்செய்தியை சென்றடைகிறது --

நாம் இத்தவக்காலத்தில் செய்யும்
இறைவேண்டல் நம்மை எந்த வகையிலும் மாற்றா விட்டால்
உண்ணா நோன்புகள் நம்மை தீயவற்றிலிருந்து விடுவிக்காவிடில்
நாம் செய்யும் அறச்செயல்கள் நம்மை இரக்கமுடையோராக்காவிடில்
நமது தவக்காலத்தின் பொருளை இழந்தவர்களாவோம்.

நாம் இன்றுப் பெற்றுக் கொள்ளும் திருநீறானது நமக்கு நம்மைக் குறித்த சில உண்மைகளை வெளிளப்படுத்துகிறது --
நாம் மிகவும் பலகீனமானவர்கள், ஒரு எல்லைக்குட்பட்டவர்கள், மற்றவர்களை சார்ந்திருப்பவர்கள் ஆனால் அவற்றை நமது சிலுவையில் தான தேடிக் கண்டடைய வேண்டும். அது நம்மை எதை உணரச் செய்கிறது என்றால் நமது பலகீனங்கள் இறைவனின் இரக்கத்தால் அரவணைத்துக் கொள்ளப்படுகின்றன.

ஒரு துறவி ஒருநாள் தவக்காலம் குறித்து "தவக்காலம் என்பது நம்மை வேறொருவராக மாற்றிக் கொள்வது அல்ல மாறாக நாம் இறைப்பார்வையில் இருப்பவர்களாக, அவரால் பார்க்கப்படுபவர்களாக இருத்தல் வேண்டும்" என்றார்.

இற்த நாற்பது நாள்களில் நாம் செபிக்கும் இறைவேண்டல்கள் நம்மை உண்மையாக, நேர்மையாக செபிக்கவும், எளிமையாக வாழவும், மற்றவர்களை இன்னும் தாராள உள்ளத்துடன் அன்பு செய்யவும் தூண்டுமனால், இந்த உயிர்ப்பின் பெருவிழா நாம் போற்றிக் கொண்டாடக் கூடிய பெருவ0ழாவாக மட்டுமல்ல நமது வாழ்வையே புதியதாகத் துவங்கக் கூடிய உன்னத விழாவாக மாறிவிடும்.

இறதி ஆசீர்:

நம்மைத் தம்முடன் இருக்க அழைக்கும் இறைவன் மனமாற்றத்தின் இந்நாட்களில் நம்முடன் வழி நடப்பாராக
அவர் தம் கண்களைத் திறந்து நமக்கு என்ன தேவை என்பதைக் கூர்ந்து நோக்கி, நாம் நடக்கும் பாதைகள் கடினமானவைகளாக இருந்தால், அவர் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் சரிசெய்து நமது உள்ளங்களைப் நம்பிக்கையால் புதுப்பித்து அருள்வாராக
எல்லாம் வல்ல இறைவன் தந்தை மகன் தூய ஆவியார் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

நம் இல்லத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய இந்நாளின் சிந்தனை

தவக்காலம் என்பது மிகுதியாக எதையோ செய்வது அல்ல
ஆனால் இறைவன் பால் அதிக கவனத்தை செலுத்துவது
அதிக இரக்கத்துடன் வாழ்வது
கடவுளுக்காக திறந்த மனத்துடன் காத்திருப்பது

தவக்காலத்தின் முதல் ஞாயிறு: 22.2.2026 "A" ஆண்டு

முதல் வாசகம் : தொ.நூ 2:7-9, 3:1-7
இரண்டாம் வாசகம்: உரோ 5: 12-19
நற்செய்தி வாசகம் மாற் 4: 1-11

ஒரு சிறுவன் தன் கை நிறைய காட்டு மலர்களை எடுத்துக் கொண்டுத் தன் தந்தையை நோக்கி ஓடினான். அவன் தந்தையிடம் "தந்தையே நான் உம்மை நேசிக்கிறேன். இனி நான் உமக்கு உகந்தவற்றை மட்டுமே இனிமேல் செய்ய விருக்கிறேன்" என்றான். இப்படி சொல்லும் எந்த மகனிடமாவது தந்தை கடுமையாக "இப்படி சொல்வதற்காக நீ உன் வாழ்நாள் எல்லாம் மனக்கஷ்டப்படப் போகிறாய். நான் உன் விளையாட்டுப் பொருள்களை எல்லாம் எடுத்துக் கொள்ளப் போகிறேன். நீ உனக்க விருப்பமில்லாதவற்றை மட்டுமே உண்ண வேண்டும். இனி நீ மகிழ்ச்சியாகவே இருக்க மாட்டாய்" போன்ற வார்த்தைகளைக் கூறுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். தனட பிள்ளையின் மீது அன்பு செலுத்தும் எந்த தந்தையாவது இப்படி பேசுவாரா? ஆனால் அவர் தன் பிள்ளையை கட்டித் தழுவி, அவனது அன்பைக் கொண்டாடுவார். அவனை பாதுகாப்புடனும் அக்கறையுடனும் வழிநடத்துவார்.

ஆயினும் நாம் நம் அன்பான விண்ணகத் தந்தையை இவ்வாறு தான் நடத்துகிறோம். அவரை நாம் ஒரு தடைக்கல்லாக, முட்டுக்கட்டைப் போடும் இணக்கமற்ற தந்தையாகவேக் காண்கிறோம். நம்மை நாம் அவருக்கு முழுமையக ஒப்புக் கொடுத்து விட்டால், அவர் இப்போது நமக்கு மகிழ்ச்சித் தரும் அனைத்தையும் எடுத்துக் கொள்வார் என்று எண்ணுகிறோம். நாம் இன்று தவக்காலத்தின் முதல் ஞாயிறில் இருக்கிறோம். இன்றைய நாளின் வாசகங்கள் நம் வானகத் தந்தையாம் இறைவன் ஒரு கொடுங்கோலர் அல்ல மாறாக அவர் நம்மையும் நம் இதயத்தையும் அன்போடு நேசித்து நாம் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று விரும்பும் அன்பானத் தந்தை என்பதை கண்டுணரச் செய்கின்றன.

நாம் இப்போதுக் காலடி எடுத்து வைத்திருக்கும் இத்தவக்காலம் நம்மை இறைனையும், மனமாற்றத்தையும் நோக்கித் திரும்பச் செய்கின்றன. நமது திருஅவை இந்த நாட்களை நமது வாழ்வை மாற்றி அமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அது நமது விசுவாசத்தை ஆழப்படுத்திக் கொள்ளவும், நமக்கும் இறைவனுக்கும், நமக்கும் சக மனிதருக்கும் இடையேயான உறவைக் குறித்து சிந்திக்கவும், நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் வாழ்வை சுயபரிசோதனைக்கு உட்படுத்தவும், மாற்றங்கள் தேவைப்பட்டால் செய்துக் கொள்ளவும் வழி செய்கிறது. இதன் வாயிலாக நாம் சரியாக வாழவும், மழுமனத்துடன் நாம் நம்பிக்கைக் கொள்ளவும் உதவி செய்கிறது.

இந்தப் பாதையைத் தேர்ந்தெடுப்பவர்கள் சோதனையிருந்துத் தப்பித்தவர்கள் அல்ல. ஆனால் நமது வாழ்வு, நமது விசவாசம் ஆகியவற்றின் பொருள் குறித்து நம் மனங்களில் கேள்விகள் எழந்துக் கொண்டே இருக்கும். அதே சமயத்தில் அவற்றின் பொருளை அறிந்தக் கொள்ளா வண்ணம் நம்மைத் தடை செய்ய பலவகைகளில் திசைதிருப்ர்தல்கள் நம் வாழ்வில் நடந்துக் கொண்டே இருக்கும்

எனவே இந்த தவக்காலத்தின் நாற்பது நாட்களில், நாம் நம் இறைவனை நோக்கித் திரும்பவும், நமது வாழ்வை இறையாட்சியின் பக்கமகத் திருப்பவும் வேண்டி அவரது இரக்கத்தை இறைஞ்சி மன்றாடுவோம்.

பாவ மன்னிப்பு வழிபாடு:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே இன்று அநேக மக்கள் செல்வத்தின் பின்னே ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீரோ "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்" என்கிறீர் - ஆண்டவரே இரக்கமாயிருமட

அநேக மக்கள் தங்களைக் குறித்து அளவுக்கு அதிகமாக உயர்வாக நினைத்துக் கொண்டிருக் கிறார்கள் தங்கள் ஆணவத்தையே வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் நீர் கூறுகிறீ "உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம்" - கிறிஸ்துவே இரக்கமாயிரும்

ஏராளமான மக்கள் அதிகாரத்தையம், வெற்றியையும் எந்த விதத்திலாவது, அல்லது தீமையான வற்றை செய்தாவதுக் கைப்பற்றி விடவேண்டும் என்ற முனைப்பில் இருக்கிறார்கள். ஆனால் நீரோ "அகன்றுப் போ சாத்தானே - கடவுளாகிய ஆண்டவர் ஒருவருக்கே பணி செய்" என்றுக் கூறினீர் - ஆண்டவரே இரக்கமாயிரும்.

மன்னிப்பு மன்றாட்டு:
உண்மையான உள்ளத்துடன் மனதுருகி மன்னிப்பை வேண்டுவோருக்கு பாவ மன்னிப்பை வழங்கும் நல்ல இறைவா எங்களுக்கு உமது இரக்கத்தை அளித்தருளும். எங்கள்

பாவத்தளைகளிலிருந்து எங்களை விடுவித்தருளும். நன்மையனவற்றில் எங்களுக்கு வலுவூட்டி எங்களை நிறை வாழ்விற்கு வழிநடத்துவீராக - ஆமென்.

மறையுரை 1. -- சோதனை, பாவம், நம்பிக்கை

மறையரையை நான் ஒர் கதையுடன் துவங்க ஆசிக்கிறேன்.

ஒரு சிறுவன் தன் கை நிறைய காட்டு மலர்களை எடுத்துக் கொண்டுத் தன் தந்தையை நோக்கி ஓடினான். அவன் தந்தையிடம் "தந்தையே நான் உம்மை நேசிக்கிறேன். இனி நான் உமக்கு உகந்தவற்றை மட்டுமே இனிமேல் செய்ய விருக்கிறேன்" என்றான். இப்படி சொல்லும் எந்த மகனிடமாவது தந்தை கடுமையாக "இப்படி சொல்வதற்காக நீ உன் வாழ்நாள் எல்லாம் மனக்கஷ்டப்படப் போகிறாய். நான் உன் விளையாட்டுப் பொருள்களை எல்லாம் எடுத்துக் கொள்ளப் போகிறேன். நீ உனக்க விருப்பமில்லாதவற்றை மட்டுமே உண்ண வேண்டும். இனி நீ மகிழ்ச்சியாகவே இருக்க மாட்டாய்" போன்ற வார்த்தைகளைக் கூறுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். தனட பிள்ளையின் மீது அன்பு செலுத்தும் எந்த தந்தையாவது இப்படி பேசுவாரா? ஆனால் அவர் தன் பிள்ளையை கட்டித் தழுவி, அவனது அன்பைக் கொண்டாடுவார். அவனை பாதுகாப்புடனும் அக்கறையுடனும் வழிநடத்துவார்.

ஆயினும் நாம் நம் அன்பான விண்ணகத் தந்தையை இவ்வாறு தான் நடத்துகிறோம். அவரை நாம் ஒரு தடைக்கல்லாக, முட்டுக்கட்டைப் போடும் இணக்கமற்ற தந்தையாகவேக் காண்கிறோம். நம்மை நாம் அவருக்கு முழுமையக ஒப்புக் கொடுத்து விட்டால், அவர் இப்போது நமக்கு மகிழ்ச்சித் தரும் அனைத்தையும் எடுத்துக் கொள்வார் என்று எண்ணுகிறோம். நாம் இன்று தவக்காலத்தின் முதல் ஞாயிறில் இருக்கிறோம். இன்றைய நாளின் வாசகங்கள் நம் வானகத் தந்தையாம் இறைவன் ஒரு கொடுங்கோலர் அல்ல மாறாக அவர் நம்மையும் நம் இதயத்தையும் அன்போடு நேசித்து நாம் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று விரும்பும் அன்பானத் தந்தை என்பதை கண்டுணரச் செய்கின்றன.

1. சோதனையின் இயல்பு:

ஒரு மனிதருக்கு அவரது முன்னோரின் சொத்திலிருந்து ஒரு பெரிய தொகையும் சொத்தும் கிடைத்தன. அதை அவர் அறச்செயல்களுக்கு அர்ப்பணித்து விட விரும்பினார். ஆனால் அதை செயல்படுத்தும் போது அவர் சற்றுத் தயக்கத்துடன் யோசிககலானார். தனக்குத் தேவையானதை எடுத்துக் கொள்ளலாம் போன்ற எண்ணம் அவரில் தலைதூக்கியது. அந்த ஒர கணநேர தவறான சிந்தனை தான், இறைவன் மீதான அவநம்பிக்கையைப் போன்றது தான் அன்று பாம்புருக் கொண்ட சாத்தான் ஏவாளின் மனத்தில் மனத்தில் இறைப்பராமரிபபின்பால் சந்தேகத்தை விதைத்தது. கடவுள் நமக்கு எத்தனையோ வாக்குறுதிகளை அளித்திருந்தாலும் நமது இதயங்கள் சந்தேகம் என்ற சோதனைக்கு உட்படுகின்றன. இன்றைய முதல் வாசகமாகிய தொடக்க நூலில் நாம் நமது முதல் பெற்றோர், ஏதேன் தோட்டத்தின் நடுவில் படைக்கப்பட்ட மரம் ஆகியவற்றைக் குறித்த கதையை வாசிக்கிறோம். பாம்புரு கொண்ட சாத்தான் பெண்ணை (ஏவாளை) சோதிக்கிறது. சோதனை பயம் கடவுளால் படைக்கப்பட்ட மரத்தில் பழுத்துத் தொங்கிய பழத்தில் இல்லை. மாறாக ஏவாளின் இறைநம்பிக்கையில் ஏற்பட்ட தடுமாற்றமே ஆபத்தாக அமைகிறது. சந்தேகத்திற்கான விததை பாம்பான சாத்தான் ஏவாளின் மனத்தில் விதைக்கிறது. "இதைத் தின்றால் நீங்கள் கடவுளைப் போலாவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும். கடவுள் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதை விரும்பவில்லை" என்கிறது பாம்பு.

பிறப்பு நிலைப் பாவம் என்றக் கூறப்படும் நிலை எது என்று நான் நம்புவது நம் முதல் பெற்றோருக்குக் கடவுள் மீதிருந்த அவநம்பிக்கையே. இது பல வகைகளில் வெளிப்படுகிறது -- கடவுளிடம் சரணடைவதில் உள்ள அச்சம், கடவுளின் அன்பையே சந்தேகித்தல், அல்லது அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதில் காட்டப்படும் மறுப்பு/எதிர்ப்பு.

ஒருமுறை நான் சில இளையோருடன் அமர்ந்துக் கொண்டு அவர்களை தங்களையே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் செபத்திற்காக தயாரித்து பின்வரும் செபத்தை செபிக்க விரும்பினேன்

"ஆண்டவரே இதோ என் கரங்கள் அவற்றை உம் திருவுள்ப்படிப் பயன்படுத்தும். என்னிடமிருந்து உமக்கு எவையெல்லாம் தேவையோ அவற்றை நீரே எடுத்துக் கொள்ளும். நீர் எவ்வாற என்னை வழிநடத்த விரும்புகிறீரோ அவவழியே நடத்தும். எம் திருவுளமே என்னில் முழுவதுமாக செயல்படுவதாக."

அப்போது ஒரு இளைஞன் தன்னால் அந்த செபத்தை செபிக்க இயலாது என்றான். தன்னை முழுமையாகக் கடவுளிடம் ஒப்படைப்பது என்ற எண்ணம் அவனுக்குள பெரிய அச்சுறத்தலாக எழுந்தது. இதுதான் பொதுவான மனித இதயம். கடவுளை முழுமையாக நம்புவதற்கு பயம். அப்படி நம்பிவிட்டால் நாம் இப்போது எவற்றையெல்லாம் விருமபி அனுபவிக்கிறோமோ அதையெல்லாம் இழந்து விடுவோம் என்ற பயம்.

**2. எதையும் மிகவும் அதிகமாக மிகைப்படுத்துதல் மற்றும் தவறாகத் தீர்ப்பிடல்:**
என்னுடன் பணியாற்றிய ஒருவர் "நான் இந்த கம்பெனியின் அனைத்து சட்ட திட்டங்களையம் பின்பறறினால் என்னால் வாழ்க்கையில் மகிழ்ச்சியையோக் காணமுடியாது:" என்றார். ஆனால் அதே நபர் தன் கம்பெனியின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடந்தபோது அதுவே அவரை பெரிய தவறுகள் செய்வதிலிருந்துக் காப்பாற்றியதையும், தேவையற்ற மன அழுத்தங்கள் தவிர்க்கப்பட்ட தையும் உணர்ந்துக் கொண்டார். எதேன் தோட்டத்தின் பாம்பு கடவுளின் சட்ட திட்டங்களைக் குறித்து தவறாக மிகைப்படுத்திக் கூறியதைப் போல, நாமும் நமக்கு தரப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் ஒழுங்குமுறைகளைக் குறித்து தவறான மிகைப் புரிதல்களை மனத்தில் வளர்த்துக் கொண்டு வாழ்கிறோம். பாம்பானது இறைவனின் கட்டளையைத் திரித்துக் கூறி தன் வினாவைத் தொடுக்கிறது. அது ஏவாளிடம் "கடவுள் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலுமிருந்தும் உண்ணக் கூடாது என்றது உண்மையா?" என்றுக் கேட்கிறது. ஆனால் கடவுள் அவர்களிடம் ஒரே ஒரு மரத்தின் கனியை மட்டுமே உண்ணலாகாது என்றுக் கூறினார். இப்படித்தான் நாமும் கடவுளின் கட்டளைக் குறித்து மிகைப்படியாக சிந்திக்கிறோம். அவை நம்மை பாதுகாப்பதை விட நமது மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு தடையாக அதை சுருக்கிவிடுவதாகக் கருதுகிறோம்.

நாம் கிறிஸ்துவ வாழ்வே "இதை செய்" "அதை செய்யாதே" என்பதில் மட்டுமே அடங்கியுள்ளது என்று நினைக்கலாம். ஆனால் இறைவார்த்தை நமக்காக ஏராளமான வாக்குறுதிகளை அளிக்கிறது. அவை நம்மை தடை செய்யும் சட்டங்களை விட மிகுதியாக உள்ளன. நமது அன்றாட வாழ்விலும் இத்தகைய மிகைப்படுத்தல்கள் நமது வாழ்வில் அதிகமான நம்பிக்கை இழப்புகளை ஏற்படுதததுகின்றன. எனவே தான் நமக்குள் நாமே "அவர் என்னை பாராட்டவில்லை" என்றோ "நான் தோற்றுவிட்டேன்" என்றோ தேவையின்றி நினைத்துக் கொண்டிருக்கிறோம். இதை புரிந்துக் கொண்டால் நாம் நம்மிலே இருநத்துக் கொண்டு நம் காதோரம் நிசைத் திருப்ர்ம் ஆலோசனையை வழங்கினாலும் நாம் சரியான முடிவுகளைத் தேர்ந்நதுத் தெளிந்து எடுக்க இயலும்.

**3. பாவங்களின் படிகள்:**

ஒரு சிறுவன் தன் வீட்டு சமையல் அறையில் பிஸ்கட்டுகள் நிறைந்த ஜாடி ஒன்றைக் காண்கிறர். முதலில் அவன் அதை நன்றாகப் பர்க்கிறான். அதைக் கண்டதும் பிஸ்கட் சாப்பிடும் எண்ணம் அவன் மனத்தில் தலை தூக்குகிறது. பின்னர் அந்த ஜாடியை நெருங்கி அதை எடுத்துக் கொள்கிறான். இந்நிகழ்வு மாசற்ற சிறுவனில் எழுந்த சிறு நிகழ்வாக இருந்தாலும், பெரும் சோதனைகளுக்கான நிகழ்வுகளும் இப்படித்தான் தொடங்குகின்றன. முதலில் பார்த்தல், விரும்புதல், எடுத்தக்கொள்ளுதல். எனவே தவக்காலம் சிறிய செயல்பாடுகளிலும் சுயக்னகட்டுப்பாடு அவசியம் என்று நமக்கு அழைப்பு விடுக்கிறது.

ஏதேன் தோட்டத்தில் பழம் தின்றதால் செய்யப்பட்டப் பாவம் மூன்று படிநிலைகளைக் கொண்டதாக உள்ளது : முதலில் பார்த்தல், விரும்புதல், எடுத்தக்கொள்ளுதல். .இந்த அனுபவம் மனித வாழ்வில் ஒரு தொடர் நிகழ்வாகவே உள்ளது. பேரரசா தாவீது முதலில் பத்சேபாவைப் பார்க்கிறார். பார்த்தப்பின் அவளை அடைய விரும்புகிறார். தன் விருப்பத்தை நிறைவேற்ற அவர் அவளை எடுத்துக் கொள்கிறார். முதல் படியான பார்த்தலில் தான் நமது வீழ்ச்சி துவங்குகிறது. தவக்காத்தில் நோன்பை அனுசரிக்கும் நாம் பசியை, நமது உணவுப் பழக்கத்தைக் கட்டுப் படுத்தினாலட மட்டும் போதாது. நமது கண்களுக்கும். மனங்களுக்கும் கூடக் கட்டுப்பாடு அளிதிது வழிநடத்த வேண்டும். நாம் நமது பார்வையில், வார்த்தையில், நமது உள்ளங்களில் அனுமதிப்பதில் சரியான தேர்வை செய்ய வேண்டும். நம்மை அழிவின் பாதைக்கு நடத்தும் உருவங்ள் (ஆள்கள்), வார்த்தைகள் மனவிருப்பங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள டீவண்டும். தவக்காலம் நமதுப் பார்வையை, நமது கவனங்கள், எண்ண ஓட்டங்களை, நதர் இதயங்களை இவைனின்பால் திரும்பிடப் பயிற்சியளிக்கும் காலமாக அமைகிறது.

**4. பாவம். மரணம், மீட்பிற்கான வாக்குறுதி:**

ஒரு பணியாளர் தனது எசமானருக்கு துரோகமிழைத்ததற்காக மரண தண்டனைத் தீர்ப்பிற்குள்ளாகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் திடீரென அந்த எசமானர் அவரை மன்னித்ததுடன் நில்லாமல், அவரைத் தன் சொந்த மகனாக ஏற்றுக் கொண்டு முன்பிருந்ததைவிட அவரை மிக்க உயரிய மதிப்புடன் நடத்துகிறார். இந்நிகழ்வு கிறிஸ்து நமக்கு என்ன செய்கிறா, எப்படி நடத்துகிறார் என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. கிறிஸ்துத் தம் தந்தையின் திட்டத்திற்குக் கீழ்ப்படிந்ததால் அவர் நம்மை, நமது முதல் பெற்றோர் ஆதாம் ஏவாள் இருந்ததைவிட மேலான உயரத்திற்கு எடுத்துச் சென்றார்.

இதையே புனித பவுல் உரோமையருக்கு எழுதியத் தன் மடலின் வழியாக, ஒரு மனிதன் வழியாக உலகில் பாவமும் மரணமும் நுழைந்தன என்கிறார். ஆதாமின் கீழ்ப்படியாமை மானுடத்தின் மீது ஒரு தீய சக்தியை கட்டவிழ்த்து விட்டது. அது தான் இன்றுவரை நம்மைப் படுததி வைத்திருக்கும் பாவம் என்னும் வலுவான சக்தி. ஆனால் பவுல் இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலால் நாம் இழந்த வாழ்வு மீடகப்பட்டு நமக்கு வழங்கப்படுவதைக் குறிப்பிடுகிறார்.

இயேசு நமக்கு ஆதாம் தன் பாவத்திற்கு ம்ன் இருந்த நிலைக்கு நம்மை உயர்த்தியதுடன் நின்று விடவில்லை. மாறாக நம் மதிபபை பன்மடங்கு உயர்த்துகிறார். உவமையில் பார்த்தத் தலைவன் தவற செய்த பணியாளனை தன் மகனின் நிலைக்கு உயர்த்தியதைப் போன்று ஆக்குகிறார். முதல் பெற்றோர் அன்று ஏதேன் தோட்டத்தில் இன்புற்று வாழ்ந்த நிலைக்கும் மேலான நிலைக்கு நாம் உயர்த்தப்பட்டுள்ளோம். கிறிஸ்துவின் வழியாக பாவத்தின், சாவின் தளைகள் உடைக்கப்பட்டுவிட்டன. நாம் எங்காவது தமுடுமாறி நின்றாலும் நாம் நம் தவறுதல்களுக்காக சிறைப்பிடிக்கப்படுவதில்லை.

5. பாலை நிலத்தில் பரிசோதிக்கப்பட்ட இறைநம்பிக்கை:

ஒரு மாணவி அடுத்த நாள் தேர்வுக்காக இரவெல்லாம் கண் விழித்து ஏறக்குறைய எல்லா வினாக்களின் பதில்களையும் நன்கு படித்து முடித்திருந்தாள். அடுத்த நாள் தேர்வின் போது அவளது முன்தயாரிப்பும், அவளுக்குத் தன் ஆசிரியர்கள் மீதிருந்த நமபிக்கையும் எத்துணைப் போதுானதாக இருந்தன என்பதை உணர்ந்தாள். அதே போன்றது தான் இயேசு நாற்பது நாள்கள் பாலை நிலத்தில் சோதிக்கப்பட்ட நிகழ்வு அமைந்திருக்கிறது. அவரது சோதனைகள் பசிக்கான ஆபத்துக்கானவை மட்டுமல்ல ஆனால் முற்றிலும் தன் பலத்தை மட்டுமே சார்ந்திராமல் இறைவனையே நம்பி அவரைச் சார்ந்து அவரில் நம்பிக்கை வைத்து வென்றதை சுட்டிக்காட்டு கிறது
இயேசு பாலைநிலத்தில. வைத்து நாற்பது நாட்கள் சோதிக்கப்பட்டார் என்று மத்தேயு நற்செய்திக் கூறுகிறது. இங்கு சோதனை என்பது வெறும் ஆசைக்காட்டி இணங்கச் செய்தல் என்றுப் பொருள் கொள்ளக்கூடாது. ஆனால் இயேசுவுக்கு வைக்கப்பட்டது உண்மையான சோதனை. அவரது நம்பிக்கை சோதிக்கபபட்டு அது நிரூபிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தது. இயேசு மூன்று விதமான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார். அவை இஸ்ரயேல் மக்கள் அனுபவித்த சோதனைகளை எதிரொலிப்பவையாக இருந்தன. பசிக் கொடுமைகள், ஏதோ ஒரு அருங்குறிக்காக ஏங்கி நிற்றல், உலகியல் ரீதியான அதிகாரம்.

1. பசிக்கொடுமை: 40 நாள்கள் உண்ணாதிருந்தவரிடம் கற்களை அளித்து அப்பங்களாக்கி உண்டு பசி தீர்த்துக் கொள்ளுமாறு கோதிக்கப்படுகிறார். ஆனால் இயேசுவோ "மனிதர் அப்பத்தினால் மட்டுமன்று கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்" என்று பதிலளிக்கிறார். உண்மையான விசுவாசம் இறைவன் மீதான முழு நம்பிக்கை. தனது அன்றாட தேவைகளில் கூட தன்னை மட்டுமே நம்பியிராமவ் அனைத்திற்கும் இறைவனை மட்டுமே நம்பியிருத்தலாகும்.

2. கடவுளை சோதித்தல்: கடவுள் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் காட்ட சாத்தான் இயேசுவிடம் ஒரு வெளியரங்கமான அடையாளத்தை செய்யக் கேட்கிறது. இயேசுவோ தமது இறைத்தன்மையை ஒரு காட்சிப் பொருளாக் விரும்பவில்லை. இறை நம்பிக்கை என்பது கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபிப்பது அல்ல மாறாக அது அவரை விசுவசிப்பதற்கே நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

3.˙ உலகியல் ரீதியான அதிகாரம் இயேசு தன்னை விழுந்து வணங்கினால் அவருக்கு உலகின் நாடுகள் அனைத்தையம் தருவதாக வாக்களிக்கிறது. ஆனால் இயேசு அதற்கு பதில மொழியாக "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக" என்று பதிலளிக்கிறார். நம் வாழ்வில் எவ்வளவு தான் மிகுதியான செழிப்புகள் இருந்தாலும் கடவுள் மட்டுமே வாழ்வில் முதன்மைப்படுத்தப்பட வேணடும்.

மேற்கண்ட இந்த சோதனைகள் இன்றும் நம் மத்தியில் இருக்கின்றன. தன்னிறைவு பெற்றிட வேண்டும் என்பதில் தீவிரமான ஆர்வமும், கவனமும் செலுத்துதல், அற்புதங்கள், அருங்குறிகளை விரும்புதல், பணம், பதவி, அந்தஸ்து ஆகியவற்றின் மீதான அதீதப் பற்று. இயேசு நமது விசுவாசம் பரிசோதிக்கப்பட்டு அது இறைவனில் ஆழமாக வேரூன்றியதாக இருத்தல் வேட்டும் என்கிறார்.

நிகழ்வு:

எனக்கு ஒரு நிகழ்வு நினைவிற்கு வருகிறது. ஒரு இளைஞன் திருமணத்திற்கு முன்பான உறவுகளுக்கு எதிராக இறைவன் அளித்துள்ள கட்டளைக் குறித்து தன் அதிருப்தியை வெளியிட்டான். அவன் அதைக் குறித்து தான் மிகவும் ஒடுக்கப்பட்ட நிலையில் இருப்பதாகவும், கடவுளின் இந்தக் கட்டளையால் தனது மகிழ்ச்சி மறுக்கப்பட்டடதாகவும் அவன் தெரிவித்தான். ஆனால் அந்தக் கட்டளை அவன் வாழ்க்கையைப் பாதுகாக்கவும், அவன் தன் அன்பை நசுக்கி அடக்கத் தேவையில்லை என்றும், இயல்பாக அவன் அன்பை செலுத்தி வாழ வழி செய்யும் கட்டளையே என்பதை அவனால் உணர்ந்துக் கொள்ள முடியவில்லை.

நமது அருட்சாதனங்களும் கூட நமது சமூக அந்தஸ்தை நிலைநாட்டிக் காட்ட பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. உதாரணமாக நமது வீடுகளில் குழந்தைகளுக்கு முதல் நற்கருணை வழங்கும் நாளை அதன் ஆன்மீகத்தின் உயரிய நிலையை அது அந்தக் குழந்தையின் வாழ்வில்

ஒரு அருமையான மைலகல்லை எட்டிய நாளாக பொருளுள்ள விதத்தில் கொண்டாடுவதைக் குறத்து யாரும் அதிகம் கவலைக் கொள்ளாமல் நமது சமூக அந்தஸ்தை நமது பொருளாதார அந்தஸ்தை வெளிப்படுத்தும் சமூதாயக் காட்சிப் பொருளாகவே நிகழ்த்தப்படுகின்றன. சோதனைகள் இத்தகைய சிறிய வழிகளில், சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சில பழக்க வழக்கங்களின் வழியாகவே நுழைகின்றன. அவ்வாறு நுழையும் அவை நமது நேர்மைக்குப் பெரும் சவாலாக உள்ளன.

நோன்பு (உண்ணா நோன்பு உட்பட) என்றால் என்ன? நோன்பு ஒரு தண்டனை அல்ல. மாறாக அது நமத கண்களுக்கும், மனவிருப்பத்திற்கும் அளிக்கப்படும் ஒரு பயிற்சி. நமது பேராசையையும், நமது பாலுணர்வையும் தூண்டக்கூடிய உணர்வுகளை தவிர்க்க உதவிடும் பயிற்சியே நோன்பு. தவக்ககாலமே நாம் நமது ஏனைய வாழ்நாள் முழுவதும் விழிப்பாயிருப்பதை நடைமுறைப்படுத்த நம்மை பழக்கிக் கொள்ளும் காலமாகும்.

இப்போது நாம் துவக்கத்தில் கேட்டக் கதைக்குத் திரும்ப வருவோம். தன் தந்தைக்குக் கைகளில் இருந்த காட்டு மலர்களை அளித்த சிறுவன் தன் தந்தையிடமிருந்து அவரது அன்பையும், கரிசனையையும் பலனாகப் பெற்றான். நம் தந்தையாம் இறைவன் நாம் தரும் நம்பிக்கையை, நமது நோன்பை. நமது மனமாற்றத்தை, பாவத்தின் மீதான நமது மனவருத்தங்களைப் பெறும்போது அவர் நமக்கு இவ்வுலகத் தந்தையர் அளிப்பதைவிட மிகப் பெரிய, அதிகமான மிகுதியான அன்பை நம் மீதுப் பொழிவார். அவர் நம்மை அழித்துப் போடுபவர் அல்ல மாறாக அவர் நம்மை உயர்த்தி கிறிஸ்துவில் நமக்குப் புதுவாழ்வளிப்பவர். தவக்காலத்தில் பயணிக்கும் நாம் சோதனனக்குட்படுத்தப்படலாம். ஆனால் அதே சமயத்தில் தவக்காலம் நமக்குக் கற்பிக்கும் காலமாகவும் உள்ளது. பாவம் உலகில் நுழையலாம் ஆனால் இறைவனின் அருளும் உலகின் மீதுப் பொழியப்படுகிறது. ஆனால் நம் பொருட்டு அனைத்து சோதனைகளையும் மேற்கொண்டு அவையனைத்தையும் வென்று முடித்தஈ பாவத்தின் தளைகளை அறத்தெறியும், நமக்காகப் பரிந்துரைக்கும் தலைமைக் குரு நம்மை அவர் வழங்கும் மீட்பின் விருந்தில் பங்குக் கொள்ள நமக்கு அழைப்பு விடுக்கிறார். தவக்காலம் என்பது நாம் அவரது அன்பில் முழுமையாக சார்ந்து நிற்கும் காலம். பாவத்தையும், மரணத்தையும் வென்றெழுந்த வெற்றி வீரரான கிறிஸ்துவுடன் இக்காலத்தில் இணைந்து பயணிக்க நாம் நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் பழகிக்கொள்வோம், அவர் மீதான நமது நம்பிக்கையை வளர்த்துக் கொளவோம்.

இரண்டாவது மறையுரை -- பாலை நிலத்தில் இயேசுவோடு நடைபயிலுவோம்:

இந்த மறையுரையை ஒரு சிறு கதையுடன் துவங்க விரும்புகிறேன். 2011ல் நியூஆர்லியன்ஸை சேர்ந்த சாண்டி சாங் என்ற ஓவியர் ஒரு வீதியிலிருந்த சுவற்றில் பெரிய எழுத்துகளில் பளிச்சென்ற வண்ணத்தில் ''நான் இறப்பதற்கு முன்னால்....'' என்ற எழத்துகளை எழுதினார். அந்த வார்த்தைகளை தங்கள் விருப்பத்தைத் தெரிவித்து வாக்கியமாக நிறைவு செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். வழிப்போக்கர்கள் ஆர்வத்துடன் தங்கள் மன விருப்பங்களை வெளிப்படுத்தி எழுதினர் எ.கா.''நான் ஒரு மரம் நட்டு வளர்ப்பேன்'' ''நான் தாஜ்மஹாலை சென்றுப் பார்ப்பேன்'' ''நான் 7 பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வேன்'' ''நான் என் அண்டை வீட்டாருடன் சமாதானம் செய்துக் கொள்வேன்'' இப்படி ஏராளமான செய்திகள் அதில் காணப்பட்டன. அந்த சுவர் ஒரு சிந்திப்பதற்கான இடமாக மாறியது. அது மக்களின் உள் மன எண்ணங்களை வெளியிட்டதால் -- மனித வாழ்வே என்றும் பல துவக்கங்களைக் கொண்டதாக, பல தேர்வுகளை செய்யக் கூடியதாக, கனவுகளை உள்ளடக்கியதாக இருப்பதை அறிய முடிந்தது. ஆயினும் வாழ்வின் ஒவ்வொருப் புதியத் துவக்கமும் பல சவால்களை நம் முன் வைக்கின்றன. நாம் இதுவரைக் கால் பதிக்காத ஒரு புதிய தளத்தில் கால் பதிக்க அழைக்கின்றன.

தவக்காலம் இதையே செய்ய நம்மை அழைக்கிறது. அதாவது நாம் நமது துரித நடையை சற்றே நிறத்திக் கொள்ளவும், அமைதியாக சிந்தித்து, நாம் நம் இதயத்துக்குள்ளே இருக்கும் இதுவரை பயணிக்காத பாலைநிலத்தில் கால் பதித்து இயேசு அன்று பாலைநலத்தில் பயணித்ததைப் போன்று நாமும் அந்த பாலை நிலத்திற்குள் பயணிப்போம்.

இயேசு தாம் திருமுழுக்கைப் பெற்றப்பின் அவருக்கு ஆற்றல் வாய்ந்த அனுபவங்கள் கிடைத்தன. விண்ணகம் திறக்கப்பட்டது. ஆவியானவர் அதிலிருந்து வெளிப்பட்டு அவர் மீது இறங்கி வந்தார். தந்தையாம் கடவள் ''இவரே என் அன்பார்ந்த மைந்தர்'' என்று அவரை அடையாளப்படுத்தினார். மானிடராக இயேசு தம் மனத்தில் அந்த புதிய அனுபவம் குறித்து ''உண்மையில் நான் யார்?'' ''எனதுப் பணி என்ன?'' ''இறைமகன் என்றால் என்ன பொருள்?'' ஆனால் இயேசு உடனடியாகத் தம் மறைப்பணியைத் துவங்குமுன் அவர் பாலைநிலத்தில் 40 நாட்கள் தவமியற்றச் சென்றுவிட்டார். இறைவனின் ஆவியானவர் அவரை வெறுமையும் அமைதியும் நிறைந்த இடத்திற்கு அவரை வழிநடத்தினார். அங்கே அவரை பசியும், தாகமும், தனிமையும் வாட்டி அவரைக் குழப்பி வாழ்வின் சில அடிப்படைான வினாக்களை மனதில் கேட்கச் செய்தன.

ஒருகணம் இங்கே ஒரு மலையேறி மலையில் தன் வழியைத் தவறவிட்டு தவிப்பதை மனதிற் கொண்டுவந்து சிந்திப்போம். திடீரென அவர் நடந்து வந்த பாதை காணாமல் போய்விடுகிறது, பெருங்காற்று ஊளையிடுகிறது, அவர் அங்கே தனிமையில் நிற்கிறார். முதலில் அவரை பயமும்

பசியும் வாட்ட ஆரம்பிக்கும். ஆனால் சற்று நேரத்தில் அங்கிருக்கும் சுற்றுச் சூழல் அவர் கண்களில் தெரிகிறது. அதன் அழகு தெரிகிறது. இனிமையான நீரைக் கொண்ட ஒரு அருவியோ நீரூற்றோ அங்கேக் காணப்படுகிறது. இது ஒரு புதிய நல்ல உணாவைத் தருகிறது. இதுவரை கண்டறிந்திறாத புதிய வலிமையைத் தன்னிலடக்கியிருக்கும் இடத்தைக் கண்டறிகிறார். பாலை நிலமும் இத்தகைய ஒரு அனுபவத்தையே தருகிறது. நம் கவனத்தை திசைத்திருப்புகிறது உண்மையின் பக்கம் நம்மை பார்க்கச் செய்கிறது.

சோதனையும் நமதுத் தேர்வும்:

பாலை நிலத்தில் 40 நாள்கள் தவமிருந்த இயேசு மூன்று சோதனைகளை சந்தித்தார்.

1. பசித்த வயிற்றுக்கு உணவு (அப்பம்) : "இந்த கற்களை அப்பமாக மாற்றும்" . தம் வயிற்றுப் பசியை ஆற்றிக் கொண்டு இன்னும் பல மக்களின் பசியையும் ஆற்றும் இறைவல்லமையைக் கொண்டவர் இயேசு. பசிக்கு உணவைவிட (அப்பத்தை விட) வாழ்க்கை மேலானது என்று இயேசு அறிவார். எனவே அவரது பசி மிகவும் ஆழமான ஆன்மீகத் தாக்கம் கொண்ட பசி. அது கடவுளைப் பற்றியப் பசி, வாழ்வின் பொருளைக் கண்டுணரும் பசி, அன்புக்கானப் பசி.

நாம் இப்போது பெரியதொரு வீட்டை அல்லது மிக விலையுயர்ந்தப் பொருள் ஒருப் பொருளை வாங்குவதறகாக முயற்சிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அத்தகைய எண்ணங்களைக் கொண்டவாகள் அவர்களது வாழ்வின் சிறிய செயல்கள் நிகழும்போது அந்த நேரத்தில் திருப்திப் பட்டுக் கொள்வார்கள். ஆனால் உள்ளத்தின் ஆழத்தில் அவர்களது இலக்கைக் குறித்த எண்ணமே அதற்கான தொடர்புகள், அல்லது அவற்றைக் குறித்த சில அமைதிக்கான எண்ங்கசே அதிகமாக நிறைந்திருக்கும். பசிக்கான உணவு (அப்பம்) மட்டும் இதயத்தை நிறைவித்து விடுவதில்லை.

2. தம்மை நிரூபித்தக் காட்டல்: -- இங்கிருந்து (ஆலயத்திலிருந்து) கீழே குதியும் கடவுள் உம்மைக் காப்பாற்றுவார்" இந்த சோதனை இயேசுவுக்கு இறைவனின் மீதிருநத கவனத்தை தம் பக்கம் திருப்ப, மற்றவர்களை ஆச்சரியத்தில் மூழ்கடிக்க, அல்லது தம் நம்பிக்கையை உறமிபபடுத்திக் காட்ட போன்ற நிலைகளில் தரப்பட்ட சோதனைகள். அந்த சோதனையையும் இயேசு ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் இறைவனை முழுமையாக நம்பினார் எனவே அவருக்கு வெளிப்படையாக எந்த அருங்குறிகளும் தேவைப்படவில்லை.

ஒரு மாணவன் தன் ஆசிரியரிடம் "நான் இதை மிகச்சரியாக செய்து முடித்துவிட்டால் நீங்கள் எனக்கு பரிசு வழங்கவீர்களா? என்றுக் கேட்டான். அதைக் கேட்ட அந்த ஆசிரியை புன்னகைத்தவாறே "நான் பரிசளிக்க மாட்டேன். இது நீ செய்ய வேண்டிய ஒரு செயல். அதை நீயே உன் மீது நம்பிக்கை வைத்து சரியாக செய்ய முயற்சி செய். பரிசுக்காக எதையும் செய்யாதே" என்று பதிலளித்தார்.
அந்த மாணவனைப் போன்றே இயேசுவும் அன்ற செயல்பட்டார். அவர் தமக்கு இருந்த இறை விசுவாசத்தின்படியே செயல்பட்டார். மற்றவர்களை ஈர்க்க. வெளஜயரங்கள அடையாளங் களுக்காக அவர் செயல்படவில்லை.

3. பதவியும் அதிகாரமும்: மூன்றாம் சோதனையில் சாத்தான் இயேசுவுக்கு அரசுக்களை அளித்து அவரை அரசராகத் தலைவராகப் போவதாக அறிவிக்கிறது. எதையும் அதிகாரத்திற்குள் கொணடு வந்து அதைக் கட்டுபடுத்துவதால் அது அழிவை சந்திக்கும் என்பது இயேசுவுக்குத் தெரியம். "உன் கடவுளாகிய ஆண்டவரையே வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக" என்பதே அவரது பதிலாக இருந்தது. அவரைப் பொறுத்த அளவில் இறைவன் மட்டுமே போதுமானவர். அன்பும் பணியும் மட்டுமே நிறைவாழ்வை அளிக்கும் என்பதை அவர் நம்பினார்.

மேற்கண்ட சோதனைகள் இயேசுவுக்கு மட்டுமே உரித்தான கதைகள் அல்ல. அவை நமக்கும் உரியவையே. சுகமான வாழ்வு, அங்கீகாரம், ஏற்றுக் கொள்ளப்படல், ஆட்சி அதிகாரம் இவற்றிற்கான தூண்டில் நம்மைச் சுற்றிப் போடப்பட்டு நம்மை அன்றாடம் இழுத்துக் கொண்டிருக் கின்றன. வாழ்க்கை நமக்கு திடீரென வரண்ட பாலையாகிவிடலாம், நோய்நொடிகள் வர நேரிடலாம், இழப்புகளை சந்திக்க நேரிடலாம், நெருக்கடியான நிலைகள் உருவாகலாம், தனிப்பட்ட வாழ்வின் சிக்கல்கள் எனப் பலவறறை சந்திக்க வேண்டியிருக்கிறது. அத்தருணத்தில் நம் உள்ளங்களில் உள்ள பாலைநிலம் நம்மிடம் "இத்தகையத் தருணங்களில் நீங்கள் யாரை நம்பப் போகிறீர்கள்? இனி எப்படி வாழப் போகிறீர்கள்?" என்றக் கேள்விகளைக் கேட்கிறது.

அண்மையில் நாம் சந்தித்த கோவிட் என்ற பெருந்தொற்றின் போது பலர் தங்கள் வாழ்வே தொலைந்து விட்டதாக எண்ணினர். சிலர் அனைவரையும் இழந்து தனித்து விடப்பட்டனர். பலாட தங்களின் அதிகாரம் பலம் அனைத்தையும் இழந்ததுப் போல உணர்ந்தனர். சிலர் தங்களிடம் இருந்த பொழுதுபோக்கும் பொருள்களில் மகிழ்ச்சியை உணர்ந்தனர். ஆனால் இன்னும் பலர் செபிக்கப் புதிய வழிகளைக் கண்டுணர்ந்தனர். பிறரன்புப் பணி செய்வதிலும், குடும்பத்தினரிடம் தொடர்பில் இருப்பதிலும் கவனம் செலுத்தினர். இந்த பாலை நிலங்களே நமக்கு எது அவசியம் தேவை என்பதை உணர்த்தின.

**நேரத்தை ஒதுக்கி வைத்துச் செலவிடுதல்:**

**இயேசு தவமிருப்பதற்காக ஒதுக்கி வைத்த நேரம் நாமும் நம் வாழ்வில் சற்று நேரம் ஒதுக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. இன்று மக்கள் தங்கள் உடல் நலத்தின் பொருட்டு வார இறுதிநாட்களை செலவழிக்கின்றனர் சிலர் ஆரவாரத்திலிருந்து ஒதுங்கியிருப்பதை விரும்புகின்றனர், சிலர் சாகச வேலைகளை செய்வதற்கு வழிவகுக்கக் கூடிய இடங்களுக்கு செய்து புத்துணர்ச்சியைப் பெற்றுக்கொள்கிறார்கள். இயேசு பாலைநில அனுபவத்தைத் தேர்ந்துக் கொண்டதற்கு வேறு காரணங்கள் உள்ளன. அவர் பாலை நிலத்திற்குச் சென்றது சாத்தானை குழப்புவதற்கும், தமது பொது வாழ்வு மறைப்பணிக்காகத் தம்மை தயாரித்துக் கொள்வதுமே நொக்கங்களாக இருந்தன. தவக்காலம் என்பது நமது நேரத்தை ஆன்மீகத்திற்கு ஒதுக்கும் காலமாகும். நமது வாழ்வியல், நமது தேர்வுகள், இறைவன் எந்த அளவுக்கு நம்மை அவரது அன்பார்ந்த மக்களாக அழைப்பதற்கு தக்கவர்களாக இருக்கிறோம் போன்றவற்றைக் குறித்து நிதானமாக அதுவும் ஆழமாக சிந்திக்கும் காலம்.**

**ஒருமுறை ஒரு ஆசிரியர் தனது மாணவரிடம் ”நீங்கள் இதுவரை நடந்து வந்தப் பாதையிலிருந்து ஒரிரு அடிகள் பின்னோக்கிச் சென்றுப் பாருங்கள். அப்போது உங்கள் முன்னே விரிந்துள்ள பாதை உங்களுக்குத் தெளிவாகப் புலப்படும்” என்றார். ஒரு மாணாக்கர் ஒருவார காலத்திற்கு சமூக ஊடங்களைப் புறக்கணித்துப் பார்த்தார். அப்போது அவர் பெற்ற நன்மைகளைப் பற்றிப் பகிர்ந்துக் கொண்டார். அச்சமயத்தில் நட்பைப் பகிரவும், படிப்பதற்கும், செபிப்பதற்கும் அதிக நேரம் கிடைத்ததாகக கூறினார். அந்த மாணாக்கரைப் போன்று தவக்காலம் நம்மிடம் கேட்பது நாம் நமது வாழ்விலிருந்து சற்றே பின்னோக்கி பயணிப்போமா என்பதையே. அப்போது நாம் புதியதொரு ஒளியைக் காண இயலும்.**

**துவக்கமும், புதுப்பித்தலும்:**

**தவக்காலம் புதியத் துவக்கங்களின் காலம். நியூ ஆர்லியன்ஸ் நகரினட தெருக்கள் அப்பகுதி மக்களை ”என் இறப்பிற்கு முன்” என்ற சொற்றொடரை தங்கள் மனவிருப்பங்களைக் கொண்டு நிறைவு செய்ய அழைத்ததைப் போன்றே தவச்காலம் நம்மிடம் கேட்பதும் இதுவே ”எது என் வாழ்வில் மிக முக்கியமானது? நான் எப்படி வாழப்போகிறேன்? ஒவ்வொரு துவக்கமும் ஒரு மாயாஜாலம் தான் ஆனால் அவற்றினுள்ளே ஒரு சவாலும் அடங்கியுள்ளது. இயேசுவின் சோதனைகள் நமக்கு ஒவ்வொரு துவக்கமும் சோதனைக்குட்படுத்தப்படுகிறது என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. ஆயினும் அவை நம்மை வாழ்வின் முழுமையை நோக்கி நடத்திச் செல்கின்றன**

**நிகழ்வு:**

**இளம் தம்பதியர் தொழில காரணமாக வேறோரு நகருக்கு புதிதாகக் குடியேறினர் அவர்கள் இதுவரை வாழ்ந்த ஊரில் இருந்த அவர்கள் உறவுகள் நட்புகளை விட்டுப் பிர்ந்து புதிய இடத்திற்கு வந்திருந்தனர். துவக்கத்தில் அவர்களது வாழ்க்கை கடினமாகவும் தனிமையாகவும் இருந்ததாக உணர்ந்தனர். நாளாக ஆக அவர்கள் தங்களைச் சுற்றி ஒரு குழுமத்தை ஏற்படுத்திக் கொண்டனர். தாங்கள் செய்த தொழிலும் பொருளுள்ளதாக மாறிவிட்டது. தங்களிடம் பொதிந்திருந்த மறைவானப் பல திறமைகளைக் கண்டறிந்தனர். எனவே எந்த புதியத் துவக்கமும் தவக்காலத்தைப் போன்று பொறுமையையும், நம்பிக்கையையும், துணிவையும் கொண்டதாக இருக்க வேண்டும்.**

**முடிவுரை:**

**நான் இபபோது அன்றாட வாழ்வின் நிகழவுகளிலிருந்து எடுக்கப்பட்ட கதையுடன் முடிக்கப் போகிறேன். ஒரு சிறுவன் சிறியதொரு பூந்தொட்டியில் ஒரு விதையை ஊன்றி தினமும் தண்ணீர் பாய்ச்சி வந்தான். வாரங்கள் சென்றன. பூந்தொட்டியில் எந்த மாற்றமும் விளையவில்லை. ஒருநாள் திடீரென பசுமை நிறத்துடனான ஒரு சிறிய முளைக் கிளம்பியது. அந்த சிறுவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவன் அந்த விதையை இன்னும் அதிகப் பொறுமையோடு பாதுகாத்து வளர்க்கலானான்.**
**தவக்காலம் அந்த விதையைப் போன்றது. நமது இறைவேண்டல்கள், நமது நோன்புகள், நமது அறச்செயல்கள் ஆகியவை நமக்கு சிறிங செயல்பாடுகளாகத் தோன்றலாம். ஆனால் கடவுளின் கரிசனையால் அவை நமக்கு பெரிதான வாழ்வை, இறையன்பை, இறை நம்பிக்கையை வழங்கி நம்மையும், நமது உலகையும் ஆசீரால் நிரப்புகின்றன. இத்தவக்காலத்தில் நாம் இயேசுவோடு பாலை நிலத்தில் நுழைய நேரம் ஒதுக்குவோம். அவரைப் போல சோதிக்கப்பட நமது தேர்வுகளைக் குறித்து சிந்திக்க, நமது கடவுளின் அன்பு நாம் வளர உதவி செய்யும் என்று நம்புவோம்.**

**நியூஆர்லியன்ஸின் சுவருகள் அழைப்பதை நினைவிற்கொள்வோம் ”என் இறப்பிற்கு முன் நான் எந்த குறிக்கோளுடன் வாழப் போகிறேன்?” என்று சிந்திப்போம். நாம் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாக பணிசெய்பவர்களாக, தினமும் நம்பிக்கையும் அன்பும் கொண்டு வாழ்வோம். - ஆமென்.**

**இறுதி ஆசீர்:**

நாம் பொய்மையான வாக்குகளுக்கு மயங்கி சோதனைக்குட்படாதபடிக்கு கடவுள் நம்மை ஆசிர்வதிப்பாராக.
நாம் நம் ஆண்டவரை மெய்யாகவே நம் இவைனாக ஏற்றக் கொள்ளும் பொது நம்மைக் குறித்து உண்மையாகவே மனிதர்களே என்ற உணர்வைப் பெற்றுக் கொள்ள, அவரை நமது தன்னல நோக்கத்துடன் நமக்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ளாதவாற நமக்கு உள்ளார்ந்த பார்வையை அளிப்பாராக.
நம் ஆண்டவர் நமக்கு எவை நல்லனவானதோ அதை அருளவும், அவரது திருவுளத்தை மட்டும் நிறைவேற்றிடும் வலிமையை அருளவும், நாம் எங்கு செல்ல வேண்டுமோ அங்கு நம்மை வழிநடத்தவுத் அருள் புரிவாராக.
எனவே நம்மை அன்பு செய்யும் ஆண்டவர் நம்மை தந்தை மகன் தூயஆவியாரின் பெரால் ஆசீர்வதித்து வழிநடத்துவராக ஆமென்.

**வழியனுப்புதல்:**

நம் ஆண்டவரை உங்களது வாழ்வால் மாட்சிப்படுத்த அமைதியில் சென்று வாருங்கள்

**இல்லத்திற்கு எடுத்துச் செல்ல சில நினைவலைகள்:**

இந்த தவக்காலத்தில் கடவள் நம்மை கடுமையாக எசமானர் அல்ல. மாறாக அவர் நமது அன்புத் தந்தை.
சோதனைகள் நமக்கப் பாடம் புகட்டுகின்றன. பாவம் நம்மை சவால்களை மேற்கொள்ளச் செய்கிறது. ஆனால் இறையருள் நம்மில் மாற்றங்களை உருவாக்குகிறது.
அவரை நம்புவோம். அவருடன் பாலை நிலத்தில் வழி நடப்போம்.
நாம் ஆற்றும் சிறு சிறு நற்செயல்கள், நமது தியாகங்கள் நம்முள் வளர்ச்சியடைந்து அபரிமிதமான வாழ்வை அருள்வனவாக.